29/6/86

யாழ்ப்பாணம் - நல்லூரின்

உயர் சைவபூவைசிய குலத்திற் பிறந்தவரும்
டாக்டர் சோமசுந்தரம் சரவணமுத்துவின் மகனும்
மானிப்பாய் வாசகருமான,

சிவபதமடைந்த டாக்டர்

## உயர்திரு. சரவணமுத்து சோமசுந்தரம்

அவர்கள் பிரிவுகுறித்து

# நினைவு மலர்

காலயுக்தி ௵ ஆனி ௴ 1978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர்

# சரவணமுத்து சோமசுந்தரம்

அவர்கள்



தோற்றம் : **2-11-1912**

மறைவு : **27-6-1978**

**திதிவெண்பா.**

சேமமுற வைகும் திறல்சேர் வைத்தியனுர்
சோமசுந்தரர் போந்ததாயநாள் — யாமறியும்
காலயுக்தி ஆனி கலைதேயும் அட்டமிசேய்
ஞாலத்துத் தரட்டாதி நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## வெண்பா

மங்களஞ்சேர் மானிநகர் மாநதர் பிணிநீங்கச்
சங்கை மிகவுழைத்த சரப்புடையோன் — எங்கள்
நற்சோம சுந்தரர்பேர் நாளும் பொலிந்திடயாம்
கற்றுங் கணபதி காப்பு.

## ஆசிரியப்பா.

நெடுங்கடல் தோன்றும் தடந்திரை வீசுறு
மதிநலமழியக் கதிர்விடு தரளமும்
செங்கதிர் மழுங்கப் பொங்கு செம்மணியும்
வடவையுள் நாணச்சுடர் விடு பவழமும்
தென்னுற மின்னும் பொன்னும் பூண்டு
வெண்ணுரைத்து கில்புனை வண்ண யாழ்ப்பாண
மென்னுங் கன்னிக் கெழில் முகமாய
மன்னுறு நலமெலாம் தன்னு ளடக்கிய
கண்ணிமா, சிவ புண்ணியங் கமழும்
நல்லூ ரென்னும் தொல் லூரதனில்
கொலையும், புலாலும் அறவே நீத்த
பூவைசிய குலமாதனில்
சைவம் வளர்ந்த நாவலர் தமக்கு
நல்ல சற்குருவாய் வந்த வதரித்த
"காரேறு பசுபாச பதில ஷணப்
பிரபல சைவாகமப் பொக்கிஷம்
தன்னிக ரில்லாக் கல்விப் பெருங்கடல்
மனப்புலி முதலி பெறுந் சபாரஞ்சிதம்
பேசரு மிலக்கண விலக்கியக் களலுண்டு
பெரிது தேக்கரிய மேக" மெனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் தம்மால் நவிலப் பெற்ற
சரவணமுத்து முதலியாரவர்க்குப்
பேரனாய் வந்த வதரித்த டாக்டர்
தரணியம் போற்றும் சரவண முத்துவும்
கற்புக் கருந்ததி கருணைக் கிருப்பிடம்
அன்ன பூரணமென்னும் பொற்புடை மாதும்
பண்ணிய மாதவப் பயனாய் வந்து
மறுவறு மதியென இனிதவ தரித்து
மனப்புலி யெனவே மறுபெயர் பூண்டு
சோமசுந்தர மெனும் பெயருடன் விளங்கி
யாழ்நகர் இந்துக் கல்லூரி யதனிலும்
கொழும்பு மாநகர் வைத்தியக் கல்லூரியிலும்
கல்விதனைக் கசடறக் கற்று
வைத்தியர்க் குரிய பட்டமும் பெற்று
நல் வைத்தியனாய் லங்கா புரியில்
பல் வேறிடங்களில் பல்லாண் டுழைத்து
மானியம் பதியின் மக்கள் பண்ணிய
புண்ணிய மீர்க்க இவ்விடம் வந்து
நோய் வாய்ப்பட்ட பல்லோர் வாழ
தாழ்ந்தோர் என்றும் உயர்ந்தோர் என்றும்
கற்றோர் என்றும், கல்லார் என்றும்
வறியோர் என்றும், செல்வர் என்றும்
பேதமற நின்று,
நோய் வாய்ப்பட்டு வந்தோர் தம்மை
மலர்ந்த முகத்தொடு இன்சொல் சொரிந்து
அல்பகலேனக்கா தரும்பணி தீர்த்தனை
மானியம் பதியின் - இந்துசமய விருத்திச்
சங்கமும் இந்து மகளிர் கல்லூரியும்
இவண் இளைப்பாறிய டாக்டர் சங்கமும்
வளர்ச்சியுற ஓயா துழைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சகம் சூது வாது வேதனை களே
தஞ்சமாய் கொள்புவி வாழ்வினை வெறுத்து
கட்டிய மனைவி சீர்மக்கள் அயலொடு
வைத்தியம் அறிந்திடு நண்பர்கள் உறவினர்
சிந்தை கலங்கிட சிலபொழு திடையில்
அந்த விண்பதம் அடைந் தனை யோகோ!
திரப்படு சுற்றம் சூழல் எல்லோரும்
அல்லும் பகலும் ஆயசத் துடனே
தேம்பித் தேம்பித் தேடியே வாடி
விம்மி விம்மி வீறிட் டழவும்
நித்தமும் நின்னை நினைந்து வாடிடவும்
மறக்கொணு நிலையில் மயங்கி விழுந்தலறவும்
நீரினில் குமிழிபோல் நிலை குலைந்திடவும்
உமது நல்லருளால் உயர்ந்த நன்மக்களை
தமது நிலையில் தயங்கி வாடிடவும்
கூற்றனே உம்மைக் கூவியழைத்தான்
மாயமாய் எங்கு மறைந்தீர் அந்தோ
நேயர் தம் நெஞ்செல்லாம் நடுங்க
மாய இப் பிறவியை மறந்தீர் அந்தோ
ஏதினிச் செய்வ மென்றேங்கிக்கலங்கிட
மானியம்பதி சூழ் இடம் தொறும் வாழும்
மக்கள் அருந்துயருழந் திடவே.

## மனைவி இராசலட்சுமி புலம்பல்

ஊறிவரும் நதியெனப் பாய்ந்திடும் அன்பினுல்
        வளர்ந்ததை உன்னியழவோ
உள்ளந்திறந்த குணம் ஒரு சிறிது கபடமும்
        உங்களிடம் கண்டதில்லையே
தேறரிய கவலையொடு தேம்பிடும் மக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கியே என்றும் அழவோ
சினந் தொரு சொல் பேசிடாச் சிறப்பினை எண்ணியே
தினமும் நான் ஏங்கியழவோ
நூறுயுகமாயினும் என்னை நீர் நீங்கிடா
திருப்பீரென் றெண்ணி நின்றேன்.
நேயரே ஒரு நொடியி லோடினீர் நொந்து நான்
நினைவழிந் தேங்கினேன்.
ஆறவழி தெரிகிலா அபலையாய் ஆகினேன்
ஐயனே விதியுமிதுவோ
அனுதினம் உமையே நினைந்து வாடுகின்றேன்
நினைதொறும் தீ பற்றி எரிகுதே
அப்பனே என் செய்வேன்.

**மக்கள் 1) சுந்தராஜன் 2) சிறீனிவாசன் 3) சிதாலக்ஷ்மி (4 ஜானகி 5) கமலா பெருமக்கள் — புலம்பல்**

ஓயாத கண்ணீரைச் சிந்திச் சிந்தி
உருகுகிறோம் உம்பிரிவால் கண்ணுற்
பாயாதநீரெல்லாம் பாய்ந்தே வற்றிப்
புலம்பு நிலை தளர்ந்தனமே எங்கள் வாழ்வைக்
காயாகக் கண்டவரே கனியாகக் கண்டு
களிக்காமுன் ஓடியதேன் இனிமே லிங்கே
தாயாக அலைவது தான் கடவுள் விட்ட
நடு வழியோ ஐயாவேஎன் செய்வோம்.

## மருமக்கள் புலம்பல்

மடைதனை உடைத்துப் பாயும் மாவலி ஆறேபோல
இடைவிடா தொழுகுங் கண்ணீரோடு நாம் புலம்பவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடலையைச் சேர்ந்தீரையோ துடிக்கின்றோம் பதைக்கின்
றோம் யாம்
கொடுமையிங் கிதனையேனோ கடவுளர் தந்தார் மாமா.

## பேத்தி அமுதினி, பேரன் துஷ்யந்தன்
## மற்றும் பேரப்பிள்ளைகள்

தூக்கி மடிகிடத்தித் தூங் கடா கண்ணே யென்று
பாக்கனிலே தாலாட்டினையே — வீக்கமெடுத்
திங்களுது துன்பமுறும் எம்தனை நீ றெண்ணாது
எங்ககன்றீரென் செய்குவேம்.

சகோதரர்: இரத்தினராசா, இராஜேஸ்வரி, ஞானசம்பந்தர்
சாயுச்சியம், தில்லைநாயகி புலம்பல்

பாயுதே கண்ணீராறு பதைக்குதே நெஞ்சம் அண்ணை
சாயுதே உடலம் சோர்ந்து தளருதே நீயில்லாமல்
காயுதே நாக்கும் ஐயோ கலங்குதே மனமும் கண்ணும்
ஓயுமோ துயரம் இங்கு ஒழியுமோ இல்லை ஐயா

மைத்துனர்: கைலாசபிள்ளை, நாகலட்சுமி — பசுபதிச் செட்டியார்
கனகரத்தினம், தம்பிராஜா, சிவகாமசுந்தரி, இராமலிங்கம்
டாக்டர் அன்னபூரணம், வள்ளியம்மைபிள்ளை, சந்திரா லஷ்மீ
புலம்பல்

வந்தாலருகிருத்தி வாயினிக்க நெஞ் சினிக்க
தந்தாயுபசாரம் நீர் மறைந்து — வெந்நீர்
பெரு நெருப்பி லென்றதனைக் கேட்டே பெரிதுமனம்
உருகி அழிந்தேமுயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிற்பற்று, மானிப்பாய், நவாலி,
ஆனைக்கோட்டை, சுதுமலை, சண்டிலிப்பாய்

## மக்கள் புலம்பல்

வைகறை தொட்டு மருந்துக்கு வந்தவர் வாட்டமற
மெய் வருநோய்க்கு மருந்து தந்தாயிந்த மேதினியிற்
செய்யறம் சீல மிவைபல பேசிச் சிரிக்க வைத்தாய்
ஐவகை யூருமழுது புலம்பவிட்டுச் சென்ற தென்னே!
கற்றவன் நற்றமிழ்ப் பண்டிதன் ஊரவர்தான் மதிக்க
பெற்றவன் தீதறியாதவன் நல்லறம்தான் புரிந்த
நற்றவன்ஏகிட நாடொறும் மெங்கிஇனி நாங்களெல்லாம்
பெற்றனம் தீர்வரும் வேதனையென்றன ரூரவரே

## வேறு

நோயுற்று வந்தார் மருந்தேற்றுப் போந்தார்
நோய் போய் மகிழ்ந்த பல்லோர்
நேயத்தி லாழ்ந்தார் உதவிக்கு வந்தார்
நின்னன்பி னுர்வ முற்றே
வாய்மைக்கு வேந்தன் றனையெண்ணி வந்த
வறிஞர்களோடு மயலார்
தாயுற்ற சேய்களெனவே கலங்கத்
தானெங்கு சென்று மறைந்தார்
உலையாத அன்பின் மலையாக நின்ற
உளமாரவேற்கை முருகன்
சிலையார்ந்த கோவில் தினமேயு மேத்தி
சிவமார்ந்த சிந்தை யுடையோய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலைமாண்ப மைந்த பெரியோர்களைத்தக்
கதியாயிருந்த உரவோய்!
பழியே மிகுத்த உலகே விடுத்துப்
பதியெங்கு சென்று மறைந்தாய்

## வேறு

கையது நீட்டிற் கடவுளுக்கும் மிவன் ஈதர்சன்றிச்
செய்யெனக்கேது முதவிக ளென்றிவன் கேட்டறியான்
வையக வாழ்வு பொய் யெனக் கண்டு கடவுளரின்
செய்ய பொற் பாதம் விரும்பினன் சென்றனன் பேரி
ழப்பே
தேறுயினிக்கத் தினமுரையாடல் புரிபவனுக்
கேனோ குறைவய திந்த இறைவன் வைத்தனனென்
ருனுப் படித்தறியாததும் கேட்டிடப் பாட்டெழுதும்
பேனுத் தடைப் பட இத்துடன் விட்டனம் மன்னியுமே

இஃது

குடும்பநண்பர், இளைப்பாறிய பாடசாலை அதிபர் நவாலி யூர் திருக் குழந்தைவேலு உபாத்தியாயர் அவர்களின் புதல்விகள் தங்கள் குடும்பவைத்தியர் Dr. சோமசுந்தரம் அவர்கள் மேல் வைத்த அன்பினுலும், தமது குடும்பத்தவர் உடல் நோய் தீர்த்த அரிய வைத்தியர் சேவை செய்தற்கு நன்றிக் கடன் செலுத்து முகமாகவும் மானிப்பாய் கோவிற்பற்று மக்கள் பிரலாபத்தை நேரில் அறிந்தும், சொல்லிக்கேட்டும், உணர்ந்து பாடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடைக சாந்தி!

சத்தியத்தின் பிறப்பிடமாய் சால்பு மிக்க
சான்றோர்க்கோர் தலைமகனைப் மானிப்பாயில்
எத்திசையும் போற்றிடவே இமயம் போல
இனியபணி செய்தபெரு சோம சுந்தரா!
சித்திதரு வைத்தியனே நோய்கள் போக்கிச்
சீலமுடன் வாழ்ந்திடவே மக்கள் நாடா
வித்தகனே நோய்தீர்க்கும் வழிகள் நாடி
விருப்புடனே அவர்க்குரிய மருந்தளிப்பாய்!

வட்டவுன் வதனத்தில் வடியும் சாந்தம்
வாய்திறந்தால் புன்முறுவல் வார்த்தை இனிமை
இட்டமுடன் இடதுகை யறியா வாறே
இரப்போர்க்கு ஈகின்ற பண்பு தீய
துட்டன்எனக் கண்டாலும் துயரம் போக்கும்
தூய்மைமிகு பேரன்பு திறந்த நெஞ்சம்
பட்டொளியே வீசுகின்ற உயர்ந்த நோக்கம்
பாரினிலே யாரிடத்துக் காண்போம் ஐயா!

பொறுமைக்கோர் பூஷணமே பூமி தன்னில்
புகலரிய குணமெல்லாம் வாய்க்கப் பெற்ற
திறமைக்கோர் உதாரணமே டாக்டர் ஐயா
தீந்தமிழன் நெறிகாக்கும் திருவே எங்கள்
உறவுக்கோர் ஒளிவிளக்கே உண்மை வீரா!
உன்னரிய மனைமக்கள் நண்பர் சுற்றம்
சிறகிழந்த பறவைபோல் வீழ்ந்து சோர
சிவன்தாளைச் சேர்ந்தனையோ அடைக சாந்தி!

கா. வேல்முருகன்
பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலை ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் மகளிர் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்க இரங்கல்

முகத்தினிற் புன்சிரிப்புச் சொரிந்திட எழுந்து வந்து
கையினைப்பிடித்து என்ன செய்யுதோ என்று கேட்டால்
உள்ளமுங் குளிர்ந்து பாதி வருத்தமும் தீர்ந்துபோமே
இறைவனே எப்போதந்த வார்த்தையைக் கேட்போமப்பா.

''பொன்னையர்'' என்றழைத்துப் போத்தலைத் திறந்துவைத்து
மாத்திரை முறையாய்ச் சேர்த்து மகிழ்வோடெம் வாயிற்போட
பார்த்துப் பார்த்தோடு மன்றோ எஞ்சிய பாதிநோயும்
ஐயனே இனியாரந்தப் பணியினைச் செய்ய வல்லார்.

மாண்புறு மானிப்பாயின் மகளிர் கல்லூரி தன்னின்
மாடி வீடமைக்கும் போதும் கலைவிழா நடத்தும்போதும்
சீரிய பெற்றோர் சங்கம் பெருகையாய்க் கூடும்போதும்
நாடியே வந்து நிற்பாய் இன்று நீ எங்குற்றோயோ.

நெற்றியில் நீறு பொங்க கண்களில் கருணைபொங்க
செப்பிடும் வாய்மருங்கில் இன்தமிழ் மலர்ந்து பொங்க
ஐம்பொறி அறிவு பொங்க அருளது உளத்திற் பொங்க
புங்கவர் போதியே நீ சங்கரன் மலரடிக்கே.

சித்தத்தைச் சிவன்பால் வைத்த செல்வனே நொந்தவர் தம்மை இன்முகங் காட்டி இடரறுத்த செம்மலே! செந்தமிழ்ப் பாவல் வேற்கையோன் தலத்தில் சைவத்தை வளர்த்த நுண் கணக்காளனுய் செவ்விய பொருளை சீர்பெற வைத்து மானி மகளிர் கல்லூரியில் மாடி வீடமைக்க உதவிய அண்ணலே! நின்பிரிவால் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவர்களும் ஏனைய ஆதரவாளர்களும் கரங் கலங்குகின்றோம். நலம்குன்று நைந்து வருவோர்க்கு நலம்பெற வாழ் வளித்தாய், சுகம் குன்றி உளையனைந்தோர்க்கு மருந்தும் விருந்துமளித்து உயிர் கொடுத்தாய், வீறிட்டழும் குழந்தைகளை மடிமேல் வைத்து மகிழவுறுத்தி மருந்தளித்தாய், வளமற்ற ஏழையையும் வளம்பெற்ற செல்வரையும் சமமாய் மதித்தாய் நின் பிரிவால் நாமும் நாடும் நலிவுறுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியுட் கலர்ந்த சோமசுந்தரனே நின்பண்பை எம்மாற் கூறமுடியுமோ! நின் தவச் செயலுக்கு நாம் எம்மாத்திரம், நின் பிரிவால் வருந்தும் நின் குடும்பத்தினரையும் மக்களையும் மானி, மகளிர் கல்லூரியினரையும் காப்பாற்றச் சோதியுட் சோதியாகக் கலந்த நீ மறவாதே நீயும் நின்னடியாரோடு வாழப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர் ஆசிரிய சங்கம்
மானி, மக. கல்லூரி

---



## லங்கா சித்த ஆயுர்வேத
## வைத்திய மணவர்

மறைந்த டாக்டர் சோமசுந்தரம்
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
நாம் கடவுளை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,
செல்விகள், சரஸ்வதி, ரேஸ்
மலர், கருணேஸ்வரி
ஸ்ரீதேவி, சரஸ்வதி
சரோ, வாலாம்பிகை
மல்லிகா, சத்தியமூர்த்தி

**அடைக சாந்தி!**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

மாந்தர் பிணி தீர்த்த நம் சோமசுந்தரனுர்
போந்தாரென வேங்கிப் புரண்டென்ருே — தாந்தாமே.
செய்பணியைச் செய்வீர் மனதில் உறு நிறைவோ
டெய்திரமைதியினி.

## திருமந்திரம்

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக்காலே ஒழிவர் ஒழிந்த பின்
போத்தலே போக்கி விறகிட்டெரி மூட்டி
தீர்த்தலே மூழ்குவர் நீதியி லோரே.

## பட்டினத்தார்பாடல்

ஊரும் சதமல்ல உற்ருர் சதமல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள் சதஸ்கச்சியேகம்பனே!

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சில படி வாழ்த்தி வணங்குவாம்

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தான் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க.
ஈச னடிபோற்றி எந்தையடி போற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்று
சீரார் பெருந்துறை நந் தேவ னடிபோற்றி
ஆராத வின்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்இறந்து எல்லை யிலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்ப் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்.
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே.
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்திலே நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே.
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகி
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாயக் கிடந்த அடி யேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமு மில்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்ந்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா, அரனே! ஓ! என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே! ஓ! என்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி!

காலஞ் சென்ற Dr. சோபசுந்தரம் அவர்களது ஈமக் கிரியையிலும் மற்றும் நேரங்களிலும், உதவிக்கு வந்து குழுமிய மக்கள் எல்லோருக்கும் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். தனித்தனியே நன்றிசெலுத்தாததையிட்டு எம்மை மன்னிக்கும்படி மன்றாட்டமாகக் கேட்கிறோம்.

இங்ஙனம்
மனைவி—மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணன் அச்சகம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org